கிழக்குக் கடற்கரைச்சாலை

* 258 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கிழக்குக் கடற்கரை தேசிய நெடுஞ்சாலை அமைப்புத் திட்டத்திற்கு மத்திய அரசின் ஒப்புதல் பெற எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் தேசிய நெடுஞ்சாலை ஏற்பாட்டில் சேர்த்துக் கொள்வதற்காக 1973 மார்ச் திங்களில் இந்திய அரசுக்குப் பரிந்துரைத்துள்ள 16 சாலைகளில் கிழக்குக் கடற்கரைச் சாலையும் ஒன்றாகும்.

தேசிய நெடுஞ்சாலை ஏற்பாட்டில் மாநில நெடுஞ்சாலைகளைச் சேர்ப்பதற்கான செயற்குறிப்புகள் மைய அரசின் நிதி நிலைமை சீரடையும் வரை காத்திருக்க வேண்டும் என்று 1975 மே திங்களில் இந்திய அரசு தெரிவித்தது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, இந்தக் கிழக்குக் கடற்கரைச் சாலை நீண்ட நெடுங்காலமாக நமக்கு அறிவிக்கப் பட்டு வருகின்ற ஒரு சாலையாகவே தென்பட்டு வருகிறது. இந்தச் சாலையின் மொத்த மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு? இந்தச் சாலையின் ஆரம்பப் பணி எப்பொழுது துவங்கப்பட்டது? மைய அரசு மனம் வைத்து, அதை முடித்துக்கொள்வதற்காக நமக்கு அளிக்கப்பட்டிருக்கும் கால அளவு எவ்வளவு என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, தேசிய நெடுஞ்சாலைத் திட்டத்தின்கீழ் வருகின்ற இது, 75 கிலோமீட்டர் தூரமுடையதாகும். இது முழுவதிலும் ஒரு வழிப் பாதை அமைக்க ரூ. 1,800 இலட்சம் செலவாகும். இரு வழிப் பாதை யானால் ரூ. 3,000 இலட்சம் செலவாகும் என்று கணக்கிடப் பட்டிருக்கிறது. மத்திய நிதி உதவியுடன் முடிக்கப்பட வேண்டிய ஒன்றாகும் இது. இத்திட்டத்திற்காக ரூ. 265.5 இலட்சத்தில் 40 பாலங்களுக்கான பணத்தை இந்திய அரசாங்கம் அனுமதித் திருக்கிறது. அவற்றைக் கட்டி முடித்துக் கொண்டிருக்கிறோம்.

1975 நவம்பர் 11]

இன்னும் பாதி பாலங்கள் கட்டி முடியும் தருவாயிலிருக்கின்றன. இருந்தாலும், இப்பொழுது நிதிப் பற்றுக்குறை காரணமாக, பாதையைப் பொறுத்தவரையில் கடைசியாகத்தான் கவனிக்க முடியும் என்று மத்திய அரசாங்கம் தெரிவித்திருக்கிறது. மத்திய அரசிடமிருந்து நிதிப் பற்றுக்குறை தீருகிறவரையில் பொறுத்திருக்க வேண்டுமென்று சமீபத்தில் கடிதம் வந்திருக்கிற காரணத்தினால் அந்த வேலைகள் தேங்கியிருக்கின்றன. இருந்தாலும் இந்த முக்கியமான பாதையை அரசு வற்புறுத்தி வருகிறது.

திரு. வை. பாலசுந்தரம்: தலைவரவர்களே, இந்தத் தேசிய நெடுஞ்சாலைகளுக்கு மத்திய சர்க்கார் எல்லா மாநிலங்களுக்கும் நிதி வழங்குகிறது. ஆனால் தமிழ் நாட்டிலேதான் தேசிய நெடுஞ்சாலைக்கு வழங்கப்பட்டிருக்கிற பணம் செலவிடப்பட்டு, பற்றுக்குறை ஏற்படுகிறது என்று குறிப்பிடப்படுகிறது. அதே நேரத்தில் வெளி மாநிலத்தில் இதற்காக ஒதுக்கப்பட்ட தொகையைச் செலவழிக்காமல் அப்படியே சரண்டர் செய்கிறார்கள் என்று சொல்லப்படுகிறதே, அது உண்மையா? அப்படி இருக்குமானால் அத்தொகையை நமது மாநிலத்திற்குப் பெற்று, இந்தத் தேசிய நெடுஞ்சாலைப் பணியைச் செய்ய அரசு முயற்சிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, மற்றைய மாநிலங்களைப் பற்றிக் குறைத்து மதிப்பிடவும் இல்லை, குறைத்துச் சொல்லவும் விரும்பவில்லை. மற்றையை மாநிலங்களைப் பற்றித் தெரியாது. ஆனால், தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், மேலும் வேண்டுமென்று கேட்டோம். சென்ற ஆண்டு ரூ. 40 இலட்சம் கொடுத்தார்கள்; மேலும் தேவை என்று கேட்டிருக்கிறோம்.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் இது முக்கியமான நெடுஞ்சாலையாக இருக்கிறது. பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டு விட்டதே, நெடுஞ்சாலை எப்பொழுது பூர்த்தியாகும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, பாலங்கள் ஏற்கனவே முடியும் தருவாயிலிருக்கின்றன. இன்னும் சில பாலங்களிலேதான் வேலை முடியவில்லை. பாதை, மத்திய சர்க்கார் பணம் கொடுத்து வேலை செய்த பிறகு முடிவடையும்.

திருமதி த. ந. அனந்தநாயகி: மொத்தம், அந்தப் பாதையிலே எத்தனை பாலங்கள்? இதுவரை எத்தனை கட்டப்பட்டுள்ளன? இன்னும் எத்தனை கட்டப்பட வேண்டும்? அவற்றை முடிக்க எவ்வளவு காலதாமதமாகும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, 40 பாலங்கள் தான் கட்ட வேண்டியிருக்கிறது. இன்னும் கட்ட வேண்டிய பாலங்கள் சிறுசிறு பாலங்களாகத்தானிருக்கின்றன. அவைகளைப் பற்றி தோராய மதிப்பீடு என்னிடத்திலே இல்லை

சாலை ஆய்வாளர்களுக்கு ஓய்வூதியம்

* 259 வினா—திரு. ஜி. ராமசாமி
திரு. என். கே. பழனிசாமி: மாண்புமிகு
திரு. கே. டி. கே. தங்கமணி:

பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொதுப்பணித் துறை, நெடுஞ்சாலை கிராமப் பணித் துறைகளில் ஆய்வாளராகப் பணிபுரிவோர்களுக்கு ஓய்வுக் கால ஊதியம் வழங்கும் திட்டம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) & (இ) அரசு ஆணை எண், 1326, பொ. ப. து., நாள் 1—9—1975 நெடுஞ்சாலைத் துறையிலுள்ள மாநில சேவையாக்கப்பட்ட சாலை ஆய்வாளர் ஓய்வு ஊதியம் வழங்கப்பட்டுள்ளது.

திரு. என். கே. பழனிசாமி: எவ்வளவு வழங்கப்பட்டிருக்கிறது என்ற விவரம் சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, ஓய்வு ஊதியம் வழங்குவதற்காகத்தான் இதைக் கொடுத்திருக்கிறோம். எவ்வளவு தொகை என்பதல்ல. இதனாலே எவ்வளவு பேர்கள் பலன் பெறுகிறார்கள் என்றால், 2,517 பேர் பலன் பெறுகிறார்கள்.